(இ) இரு துறைகளிலும் அமைந்துள்ள முதலீட்டுத் தொகை எவ்வளவு?

(உ) மேலும் தொழிற்கூடங்கள் ஏற்படுத்த உத்தேச முண்டா?

(எ) தனியார் துறையிலா, பொதுத்துறையிலா?

THE HON. SRI R. VENKATARAMAN : (a), (b), (c) & (d) : The Answer [a] is placed on the table of the House.

Paper factory

* 991 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there Harur taluk with the bamboos available at Kottapatty, Singarapet, Bommidi and other places?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

Hogenakkal Scheme

* 1010-A Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether consultations between the Engineers of Madras and Mysore States have been concluded, regarding construction of a reservoir at Hogenakkal across the Cauvery; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஹொகனக்கல் அணைத் திட்டமானது பாசனத் திட்டம் அல்ல. மின்சார உற்பத்தித் திட்டம் என்ற அடிப்படையில், காவிரி நதி சம்பந்தமான அடிப்படைத் தகாரேடு சேர்க்காமல் இதைத் தனியாக எடுத்துக் கொள்ளும் வகையில், மைசூர் சர்க்காரோடு பேசி, விரைவில் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைப்பற்றி மைசூர் முதல் அமைச்சரும், தமிழ்நாடு முதல் அமைச்சரும் பேசுவதாக இருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அமைச்சர்கள் பேசுவதற்கு முன்பு அதிகாரிகள் சந்தித்துப் பேசுவதாக ஒரு விவரம் வெளி வந்ததே, அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதிகாரிகள் பேசியபோது, இந்தத் திட்டத்தையும் 1924-ம் வருஷத்திய ஒப்பந்தத்தையும் சேர்த்து அவர்கள் பேசியதனால் பேச்சு வார்த்தையை நிறுத்தி விட்டோம்.

---

a Printed as Appendix IV on pages 321–324.

31st October 1962]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஹொகனக்கல் திட்டம் சம்பந்தமாகத் தென் மண்டலக் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா ? விவாதிக்கப்பட்டிருந்தால், என்ன அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மண்டலக் கவுன்சிலில் இது விவாதிக்கப்படவில்லை. இதைப்பற்றிப் பூர்வாங்கமாக அதிகாரிகள் பேசவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில்தான் அதிகாரிகள் பேச ஆரம்பித்தார்கள். அதிகாரிகள் பேசும்போது, இவ்விதமாக நீர்ப் பாசனத் திட்டத்தையும் ஒப்பந்தத்தையும் இதில் இணைத்ததனால் பேச்சுவார்த்தையை நிறுத்திவிட்டோம்.

** 1010-பி. கேள்வி.*—**திரு.** *வெ. கிருஷ்ணமூர்த்தி :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹொகேனக்கல் அணைக்கட்டு சம்பந்தமாக சென்னை, மைசூர் அரசாங்கங்களின் உயர்தர அதிகாரிகள் பேச்சுவார்த்தை சமீபத்தில் நடைபெற்றதா ?

(இ) எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது ? அதன் முடிவென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(**b**) The matter is under negotiation.

** 1010-சி. கேள்வி.*—**திரு.** *க. நாராயணசாமி பிள்ளை &* **எம். வி. கரிவேங்கடம் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹொகேனக்கல் மின்சாரத் திட்டம் பற்றி நம் மாநில அரசாங்கமும் மைசூர் அரசாங்கமும் நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : No final decision has yet been reached in the matter.

காகித உற்பத்தித் தொழிற்சாலைகள்

** 1010-டி. கேள்வி.*—**திரு.** *சா. ராமசாமி :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் எங்கெங்கு காகித உற்பத்தித் தொழிற்சாலைகள் இருக்கின்றன ?

(இ) தனியார் துறையில் நடைபெறுவது எத்தனை ?

(உ) புதிதாக எங்காவது ஏற்படுத்த உத்தேசமுண்டா ?